கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு ஆர். வெங்கடாசலம்,**
**மேயர்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி,**
**கோயம்புத்தூர்- 641 001**

**பெறுநர்**

**மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,**
**கோவை மாநகராட்சி (இணைப்புடன்)**
**வார்டு குழுத்தலைவர்கள், ஆளும்கட்சி**
**மற்றும் எதிர் கட்சித் தலைவர்கள், மற்றும**
**நியமனக்குழு உறுப்பினர்,**
**கோவை மாநகராட்சி (இணைப்புடன்)**
**அனைத்து மாமன்ற உறுப்பினர்கள**
**மற்றும், அனைத்துப் பிரிவுத்**
**தலைமைகள், கோயம்புத்தூர்**
**மாநகராட்சி(இணைப்புடன்)**
**சட்டமன்ற உறுப்பினர்கள்**
**கோவை கிழக்கு, மேற்கு,**
**தொண்டாமுத்தூர், பேரூர் மற்றும்**
**சிங்காநல்லூர் (இணைப்புடன்)**
**பாராளுமன்ற உறுப்பினர்கள்**
**கோவை மற்றும் நீலகிரி**
**பாராளுமன்றத் தொகுதி(இணைப்புடன்)**

**ந.க.எண் : 28802 / 2006 / எம்சி. 8 நாள் 23.11.2006**

**அய்யா /அம்மா,**

**பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - நவம்பர் 2006-ல் நடைபெறுவது – தொடர்பாக.**

----------

**கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 30.11.2006 ம் தேதி வியாழக் கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா உறால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து தலைமை அலுவலர்களும் மேற்படி கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் (Agenda of the Ordinary Council Meeting) இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.**

**இணைப்பு : கூட்டக்குறிப்பு**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**/ உண்மைநகல் உத்திரவின்படி/**

**ஆணையாளருக்காக,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**நகல் :**
**ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி**
**துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி**

**30-11-2006-ம் தேதி மாமன்ற சாதாரணக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்**

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br><br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ.எண். | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1. | பொறியியல் பிரிவு - வெள்ளலூர் குப்பைக்கிடங்கு – எல்லை நெடுக சாலை அமைக்கும் பணி மதிப்பீடு ரூ.25.00 லட்சம் நிர்வாக அனுமதி கோருவது – தொடர்பாக. |
| 2. | மேற்கு மண்டலம் - மேட்டுப்பாளையம் சாலை மொத்த காய்கனி மார்க்கெட் நவீன கழிப்பிடம் - குத்தகைதாரர் உரிமத்தை ரத்து செய்வது தொடர்பாக. |
| 3 | பொது சுகாதாரம் - மாநகராட்சி மருந்தகங்களுக்கு 2006-07ம் நிதியாண்டிற்கு ரூ.8-00 லட்சம் செலவில் தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்திலிருந்து வாங்க அனுமதி கோருதல். |
| 4 | பொறியியல் பிரிவு – 27 அபிவிருத்திப்பணிகள் மேற்க்கொள்ள நிர்வாக அனுமதி கோருவது – தொடர்பாக. |
| 5 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 71 பெரியார் நகரில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணி மதிப்பீடு ரூ.9.50 லட்சம் நிர்வாக அனுமதி கோருவது – தொடர்பாக. |
| 6 | மாநகராட்சி வளாகத்தில் பகுதி நேரமாக இயங்கி வரும் இந்தியன் வங்கி கிளையை முழு நேரமாக ஏ.டி.எம் வசதியுடன் செயல்பட 2000 ச.அடி. பரப்பில் கட்டிடம் - வாடகை நிர்ணயம் செய்வது தொடர்பாக. |
| 7. | பொறியியல் பிரிவு - மோட்டார் வாகனம் டி.என்.37-ஜி3003 – கழிவு செய்து புதிய வாகனம் வாங்க நிர்வாக அனுமதி கோருதல் |
| 8. | பொறியியல் பிரிவு - 16 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக. |
| 9 | வடக்கு மண்டலம் - நகரமைப்பு - க.ச.458 எண்ணில் 5.74 ஏக்கர் நிலம் - தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பத்துறை எல்காட் நிறுவனம் மூலம் தொழில் நுட்ப பூங்காவிற்கு அணுகு பாதை அமைக்க நில உரிமை மாற்றம் செய்ய ஆட்சேபனையின்மை கோருதல் - தொடர்பாக. |
| 10 | பொறியியல் பிரிவு - 10 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக. |
| 11 | பொறியியல் பிரிவு - 42 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக. |

## திருக்குறள்

**இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**

**வகுத்தலும் வல்ல தரசு.**

**(குறள் - 385)**

## விளக்கம்

**பொருட்களை உருவாக்கி செல்வத்தை ஈட்டி நாட்டின் வளம் பெருக்கி அவற்றையும் மக்களையும் பாதுகாத்து, எல்லோரும் துய்ப்பதற்கான நெறி முறைகளை வகுத்துத் திறமையாக நிறைவேற்றுவது நல்லாட்சியின் வலிமை.**

**- திருவள்ளுவர்.**

**ஆ. தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய / குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

**<u>பொருள் எண்.1</u>**

கோவை மாநகராட்சி – தெற்கு மண்டலம் - பொறியியல் பிரிவு -1 வெள்ளலூர் குப்பை கிடங்கில் பொதுமக்கள் உட்புகுந்து தீ வைப்பதை தவிர்க்கும் பொருட்டு எல்லை முழுவதும் வாகனத்தில் சுற்றி ஆய்வு மேற்கொள்ளும் வகையில் எல்லை நெடுக சாலை அமைக்கும் பணி மிகவும் அவசியம் . எனவே, முதற்கட்டமாக 330 கிலோ மீட்டர் நீள சுற்றுசாலை அமைக்க மதிப்பீடு ரூ.25,00,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியை நிர்வாக பொறியாளர் உதவி நிர்வாக பொறியாளர் (தெற்கு) அவர்கள் ஆய்வு செய்து தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

இப்பணிக்கு 2006-2007 ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பணிக்கான நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.9257/06/எம்.டி.4**

## <u>மாநகர மன்ற தீர்மானம் எண். 190 நாள்.30.11.2006</u>

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது**

---

**<u>பொருள் எண். 2</u>**

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட மேட்டுப்பாளையம் சாலையிலுள்ள மொத்த காய்கனி மார்க்கெட்டிலுள்ள நவீன கழிப்பிடத்தை 1-4-2006 முதல் 31-3-2007 முடிய ஒரு வருடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்தை திரு.எம்.ஏ.குத்தூப் த/பெ. திரு. முகமது குட்டி, கரும்புக் கடை சாரமேடு அவர்களுக்கு ரூ.1,94,000/- க்கு மாமன்றத் தீர்மான எண். 279 நாள். 27-1-2006 ன்படி 31.3.2006 –ல் ஒப்படைக்கப்பட்டது. அவருக்கு வழங்கப்பட்ட உத்திரவில் கோவை மாநகராட்சி நிபந்தனைகளின்படி பொது கழிப்பிடம் உபயோகத்திற்கு நபர் ஒன்றுக்கு ரூ.1.00 வீதம் மட்டும் வசூலிக்கப்பட வேண்டும் என்றும் அதற்குரிய ரசீதில் மாநகராட்சி முத்திரை ஒவ்வொரு பிரதியிலும் பெற்று வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது..

இது தொடர்பாக தமிழ்நாடு சட்டமன்ற பொது கணக்குகுழு 1.11.2006 ம் தேதியன்று காலை 11.30 மணிக்கு மேற்படி கழிப்பறையை ஆய்வு மேற்கொண்டனர். அதில் நபர் ஒன்றுக்கு ரூ.1.00 கட்டணம் வசூல் செய்வதற்கு பதிலாக ரூ.2.00 வசூல் செய்யப்படுவதாகவும், ரசீது ஏதுமில்லாமல் , இக்கட்டணங்கள் வசூல் செய்யப்படுவதாகவும் புகார் தெரிவித்து பொது ஏலத்தில் எடுத்து நடத்திவரும் இக்கழிப்பறை குத்தகைதாரர் மீது காவல்துறை வழியாக நடவடிக்கை எடுக்கவும் தமிழ்நாடு சட்டமன்ற பொதுகணக்குக்குழு தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளாாகள். எனவே, மேற்படி உரிமத்தை ரத்து செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 9983/06/அ1(மே).**

## <u>மாநகர மன்ற தீர்மானம் எண். 191 நாள்.30.11.2006</u>

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது**

---

**பொருள் எண். 3**

கோயம்புத்தூர் மாநகராட்சியின் கீழ் இயங்கிவரும் பதினொரு அலோபதி மருந்தகங்களுக்கு 2006 - 2007 ஆம் நிதியாண்டிற்கு தேவைப்படும் மருந்துப் பொருட்களை தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்திலிருந்து ரூ.8 இலட்சம் செலவில் வாங்கவும், அந்நிறுவனத்திற்கு இத்தொகையினை முன்பணமாகச் செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம்.** 2006 -2007 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இதற்கான நிதி ஒதுக்கீடு உள்ளதால் இந்நிதியிலிருந்து முன்பணம் செலுத்தி தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்திலிருந்து மருந்துகள் 11 அலோபதி மருந்தகங்களுக்கு வாங்கலாம்.

**எண்.11885/06/ எம்.இ 5.**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 192 நாள்.30.11.2006**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது**

---

**பொருள் எண். 4.**

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன, இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க 26-10-2006 – அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ.எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்ச்சத்தில் | ஓப்பந்தப் புள்ளி நாள் | ஓப்பந்ததாரர் பெயர் | ஓப்பந்தப் பகுதியில் குறிப்பிட்டுள்ள சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 3615/06/ எம்.டி.4 | வார்டு எண்.34 நாராயணகுரு பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகளுக்கு தார்தளம் புதுப்பித்தல் | 25.00 | 13-09-06 முதல் அழைப்பு | திரு. ஏ. அம்மாசையப்பன் | 0.28% குறைவு |
| 2. | 6640/06/ எம்.டி.4 | வார்டு எண். 64 சிவானந்தா காலனி புறவழிச்சாலையில் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 19.00 | 13-09-06 முதல் அழைப்பு | தி/ள். என்.பி.கே. அசோசியேட்ஸ் | 0.40% குறைவு |
| 3. | 558/06/ எம்.டி.4 | வார்டு எண்.49 கிழக்கு பொன்னுரங்கம் சாலையில் தார்தளம் புதுப்பித்தல் | 19.00 | 13-09-06 முதல் அழைப்பு | தி/ள். பி. செந்தில் அன் கோ. | 0.06% குறைவு |
| 4. | 556/06/ எம்.டி.4 | வார்டு எண். 49 மேற்கு திருவேங்கிடசாமி சாலையில் தார்தளம் புதுப்பித்தல் | 25.00 | 13-09-06 முதல் அழைப்பு | திரு.ஏ. வெங்கடாசலம் | 0.28% குறைவ |
| 5. | 7890/04/ எம்.டி.4 | வார்டு எண் 56 வடக்கு ஹவுசிங் யூனிட் கிழ மேல் சாலையில் தார் தளம் புதுப்பித்தல் | 6.50 | 13-09-06 ஆறாம் அழைப்பு | திரு.ஆர். கிருஷ்ணசாமி | 5.00% அதிகம் |
| 6 | 7529/04/ எம்.டி.4 | வார்டு எண். 48 மகாளியம்மன் கோவில் வீதி மற்றும் அருணாச்சலம் வீதியில் தார் தளம் புதுப்பித்தல் | 9.30 | 13-09-06 நான்காம் அழைப்பு | தி/ள். பி.மல்லையன் பில்டர்ஸ் | 4.97% அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7. | 7871/04/ எம்.டி.4 | வார்டு எண். 62 சிவக்குமார் வீதி பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலையில் தார்தளம் புதுப்பித்தல் | 7.00 | 13-09-06 நான்காம் அழைப்பு | திருமதி.எம்,. சுரோஜினி | 4.37% அதிகம் |
| 8. | 7513/04/ எம்.டி.4 | வார்டு எண். 34 பாரதி பூங்கா ஆறாவது வீதி குறுக்கு சாலையில் தார் தளம் புதுப்பித்தல். | 6.25 | 13-09-06 நான்காம் அழைப்பு | தி/ள். சாந்தி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 2.12% அதிகம் |
| 9. | 7837/04/ எம்.டி.4 | வார்டு எண். 62 கருப்புசாமி வீதியில் தார்தளம் புதுப்பித்தல். | 7.80 | 13-09-06 நான்காம் அழைப்பு | திரு. கே. நடராஜன் | 4.86% அதிகம் |
| 10. | 5837/05/ எம்.டி.4 | வார்டு எண். 60கோவில் மேடு சாஸ்திரி வீதியில் தார் தளம் புதுப்பித்தல். | 5.85 | 13-09-06 மூன்றாம் அழைப்பு | திருமதி.எம்,. சரோஜினி | 4.30% அதிகம் |
| 11 | 4913/05/ எம்.டி.4 | வார்டு எண்.56 ஈ.பி.காலனியில் தார்தளம் புதுப்பித்தல் | 8.701 | 13-09-06 மூன்றாம் அழைப்பு | தி/ள். சரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 4.89% அதிகம் |
| 12. | 14367/05 /எம்.டி.4 | வார்டு எண். 34 பாரதி பூங்கா குறுக்கு சாலை 1 மற்றும் 2 –ல் அழகேசன் சாலை 1 முதல் 2 வரை தார்தளம் புதுப்பித்தல் | 8.00 | 13-09-06 முதல் அழைப்பு | தி/ள்.கே.ஜி. லட்சுமிபதி அன் கோ | 4.43% அதிகம் |
| 13. | 3666/05/ எம்.டி.4 | வார்டு எண் 57 இந்திரா நகர் பிரதான சாலையில் தார் தளம் புதுப்பித்தல் | 6.50 | 13-09-06 இரண்டாம் அழைப்பு | திரு.ஆர். கிருஷ்ணசாமி | 4.79% அதிகம் |
| 14 | 4652/05/ எம்.டி.4 | வார்டு எண். 51 சுந்தரம் வீதி1 மற்றும் 2-ல் தார் தளம் புதுப்பித்தல் | 6.90 | 13-09-06 இரண்டாம் அழைப்பு | தி/ள். சாந்தி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 3.12% அதிகம் |
| 15. | 4408/05/ எம்.டி.4 | வார்டு எண். 63 காமராஜா் சாலையில் கவுண்டைய்யன் சாலை முதல் மேட்டுப்பாளையம் சாலை வரை தார்தளம் புதுப்பித்தல் | 5.60 | 13-09-06 இரண்டாம் அழைப்பு | தி/ள்.கே.ஜி. லட்சுமிபதி அன் கோ | 4.23% அதிகம் |
| 16. | 7025/04/ எம்.டி.4 | வார்டு எண். 55 தெலுங்குபாளையம் பிரியா நகரில் தார் தளம் புதுப்பித்தல். | 10.00 | 13-09-06 இரண்டாம் அழைப்பு | திரு. எம். துரைசாமி | 4.97% அதிகம் |
| 17. | 3541/05/ எம்.டி.4 | வார்டு வார்டு எண். 49 எஸ்.ஆர்.பி.அம்மணியம்மாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்திற்கு முன்புறம் சுற்றுச்சுவர் கட்டுதல் | 2.80 | 26-09-06 ஐந்தாம் அழைப்பு | திரு.எம் கே. ராமன் | 3.23% அதிகம் |
| 18 | 8381/05/ எம்.டி.4 | வார்டு எண். 35 காமராஜபுரம் புதிய திட்ட சாலை மற்றும் சி.எம்.சி காலனி சாலையில் தார் தளம் புதுப்பித்தல். | 4.80 | 26-09-06 நான்காம் அழைப்பு | திரு.பி. சுனில்குமார் | 4.38% அதிகம் |
| 19. | 12216/05 / எம்.டி.4 | வார்டு எண்.57 பனைமரத்தூர் , பூசாரி பாளையம், டி.என்.ஏ.யூ வளாகம் மாநகராட்சி ஆரம்ப பள்ளி கழிப்பறைகளில் சுத்தம் செய்யும் கருவி அமைத்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்தல். | 1.85 | 26-09-06 மூன்றாம் அழைப்பு | தி/ள். என்.பி.கே. அசோசியேட்ஸ் | 4.90% அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 20 | 17428/ 05/எம்.டி. 4 | வார்டு எண். 51 ஆர்.எஸ்.புரம் காதுகேளாதோர் மற்,றும் வாய்பேச முடியாத மாநகராட்சி பள்ளியில் புதிதாக வகுப்பறை கட்டுதல் (வடபுறம்) | 4.00 | 26-09-06 மூன்றாம் அழைப்பு | தி/ள். என்.பி.கே. அசோசியேட்ஸ் | 4.62% அதிகம் |
| 21 | 9236/05/ எம்.டி.4 | வார்டு எண் 61 ராமசாமி லே – அவுட் சாலையில் தார் தளம் புதுப்பித்தல் | 2.90 | 26-09-06 மூன்றாம் அழைப்பு | திரு.. எ. அம்மாசையப்பன் | 4.59% அதிகம் |
| 22 | 12217/05 /எம்.டி.4 | வார்டு எண். 58,59 மற்றும் 60 சீரநாயக்கன் பாளையம் கருமலை செட்டி பாளையம், பி.என்.புதூர், கோவில் மேடு, மாநகராட்சி பள்ளி கழிப்பறைகளில் சுத்தம் செய்யும் கருவி அமைத்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்தல். | 2.50 | 26-09-06 மூன்றாம் அழைப்பு | தி/ள். என்.பி.கே. அசோசியேட்ஸ் | 4.80% அதிகம் |
| 23 | 12056/05 /எம்.டி.4 | வார்டு எண். 62 இராமசாமி வீதியில் தார்தளம் புதுப்பித்தல் | 5.00 | 26-09-06 மூன்றாம் அழைப்பு | திருமதி .ஏ. மீனாட்சி | 4.60% அதிகம் |
| 24 | 17429/05 /எம்.டி.4 | வார்டு எண். 51 ஆர்.எஸ் புரம் காது கேளாதோர் மற்றும வாய்பேச முடியாத மாநரகாட்சி பள்ளியில் புதிதாக வகுப்பறை கட்டுதல் (தென்புறம்) | 4.00 | 26-09-06 மூன்றாம் அழைப்பு | தி/ள். என்.பி.கே. அசோசியேட்ஸ் | 4.62% அதிகம் |
| 25 | 5775/06/ எம்.டி.4 | வார்டு எண் 59 மடத்தூர் மேல் நிலைத் தொட்டி வளாகத்தில் சுற்றுச் சுவர் மற்றும் கழிப்பறை கட்டுதல் | 3.70 | 26-09-06 இரண்டாம் அழைப்பு | திரு.பி. சுனில்குமார் | 4.20% அதிகம் |
| 26 | 5572/06/ எம்.டி.4 | வார்டு எண். 51 காந்தி பூங்கா கீழ்நிலைத் நீர்த் தேக்க தொட்டி வளாகத்தில் தார் தளம் புதுப்பித்தல் | 3.65 | 26-09-06 இரண்டாம் அழைப்பு | திரு.. எ. அம்மாசையப்பன் | 4.34% அதிகம் |
| 27 | 5776/06/ எம்.டி.4 | வார்டு எண். 59 மடத்தூர் நீர்த் தேக்க தொட்டி வளாகத்தில் கம்பி வேலி அமைத்தல் | 4.25 | 26-09-06 இரண்டாம் அழைப்பு | திரு.பி. சுனில்குமார் | 4.45% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு** : வரிசை எண் 1 முதல் 4 வரையிலான பணிகள் மதிப்பீடு மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதாலும் வரிசை எண் 5 முதல் 27 வரையிலான பணிகள் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகள் என்பதாலும் இப்பணிகளின் அவசியத்தை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டி இருப்பதாலும் பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம்.** **ந.க.எண். 3615/06/ எம்.டி.4.**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 193 நாள்.30.11.2006</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது**

**<u>பொருள் எண் - 5.</u>**

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் பிரிவு எண் .5 வார்டு எண்.71 –க்குட்பட்ட பெரியார் நகரில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்ட மதிப்பீடு ரூ.9,50,000/- தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பகுதி மாநகராட்சியின் அனுமதி பெறப்படாத மனைப்பிரிவு ஆகும். ஏற்கனவே, இப்பகுதியில் குடிநீர் பிரதான குழாய் மற்றும் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கப்படவேண்டிய நிலையில் உள்ளது. எனவே, தற்போதைய (அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை அரசாணை எண் 59நி (ம) கு.வ.துறை நாள் 25-7-2006 ன் முறைப்படுத்தும் திட்டம்) அரசாணை யின் படி மேற்படி பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்ட ரூ.9,50,000/- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மனைப்பிரிவு 1-01-80க்கு முன்பும் 87 சதவீதம் அபிவிருத்தி கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதாக நகரமைப்பு அலுவலர் தனது 16-2-2006 – ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே, இந்த மனைப்பிரிவிற்கு ரூ.9,50,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதை நிர்வாக அனுமதி வேண்டி ஆணையாளர் அவர்களின் 14-06-2006 –ம் தேதிய உத்திரவின்படி பணிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டது. அவ்வாறு பொருள் வைக்கப்பட்டதில் பணிக்குழு தீர்மான எண். 537 நாள் 28-06-2006 ல் இப்பொருளை மாமன்றத்தின் ஒப்புதலுக்காகபணிக்குழு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே இப்பொருளை மாமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம்.** **ந.க.எண். 5407/06/டி1(வ). எம்.டி 2**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 194 நாள்.30.11.2006</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது**

---

**<u>பொருள் எண். 6</u>**

கோயம்புத்தூர் மாநகராட்சி வளாகத்தில் பகுதி நேரமாக இயங்கி வரும் இந்தியன் வங்கி கிளையை முழுநேரமாக ஏ.டி.எம். வசதியுடன் செயல்பட சுமார் 2000 சதுர அடிகள் பரப்பு கொண்ட இத்துடன் கூடிய கட்டிடம் வாடகை அடிப்படையில் ஒதுக்குதல் குறித்து.

கோயம்புத்தூர் இந்தியன் வங்கி உதவி பொது மேலாளர் அவர்கள், இம்மாநகராட்சியில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வரும் அவர்களது பகுதிநேர கிளையை முழுநேர கிளையாக ஏ.டி.எம். மற்றும் இன்டர்நெட் வசதியுடன் செயல்பட 2000 சதுர அடிகள் பரப்பு கொண்ட இடத்துடன் கூடிய கட்டிடம் குத்தகைக்கோ அல்லது வாடகைக்கோ ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்படி வங்கி இம்மாநகராட்சியில் பகுதிநேர கிளையாக 1975 முதல் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. இந்த கிளை இம்மாநகராட்சி வளாகத்தில் செயல்படுவதினால் மாநகராட்சியின் வரவு, செலவு கணக்குகள் வைத்துக் கொள்ளவும், மாநகராட்சி பணியாளர்களுக்கு மாத ஊதியம் வழங்கவும், ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவும், மற்றும் மாநகராட்சி ஒப்பந்ததாரர்கள் அவர்களது வரவு, செலவு கணக்குகள் வைத்துக் கொள்ளவும் வசதியாக உள்ளது. தற்போது ஏ.டி.எம் மற்றும் இன்டர்நெட் வசதியுடன் கூடிய முழுநேர கிளையாக செயல்பட அனுமதித்தால் மாநகராட்சிக்கு மேலும் வசதியாக அமையும். எனவே, இந்தியன் வங்கி கிளையை இம்மாநகராட்சியில் 2000 சதுர அடிகள் பரப்பு கொண்ட இடத்துடன் கட்டிடம் ஒதுக்கி தரவும், அதற்கு மாநகர மன்றம் நிர்ணயிக்கும் வாடகையை அவர்களிடமிருந்து பெறவும், மேலும் மேற்படி இடம் மாநகராட்சிக்கு தேவை ஏற்படும் பொழுது காலி செய்யப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதி வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு - அங்கீகரிக்கலாம்.** **ந.க.எண். 41100/2006/பி7.**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 195 நாள்.30.11.2006</u>**

**பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள இந்தியன் வங்கி கிளையினை மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் அமைக்க அங்கீகாரம் வழங்க மறுக்கலாம் என முடிவு செய்யப்பட்டது. இதனைப் பதிவு செய்யப்பட்டது.**

---

**பொருள் எண்.7**

கோயம்புத்தூர் மாநகராட்சியின் துணை மேயர் அவர்களின் அலுவலக பணிகளுக்காக பயன்பாட்டில் உள்ள இலகுரக மோட்டார் வாகனம் TN 37-G 3003. அம்பாசிடர் காரில் பெரும் பழுதுகள் ஏற்பட்டுள்ளது. அப்பழுதுகளை நிவர்த்தி செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளிலிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதில் பழுதுபார்ப்பு பணிகளுக்கு தோராயமாக ரூ.88,500/-ஆகும் எனத்தெரிகிறது. மேற்கூறிய வாகனம் கடந்த 21-07-1994-ல் வாங்கப்பட்டு கடந்த பதினைந்து ஆண்டுகளாக உபயோகப்படுத்தப்பட்டு வந்ததுடன் 2.70 இலட்சம் கி.மீ. தூரம் ஓடியுள்ளது.

அரசாணை (நிலை) எண்.983 உள்துறை (போக்குவரத்து –IV) நாள் 03-08-2004-ன்படி பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட வாகனங்களில் ஏற்படும் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செலவினம் ஆண்டொன்றிற்கு ரூ.8,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது உத்தேசிக்கப்பட்டுள்ள செலவினம் ரூ.88,500/- அரசு நிர்ணயித்த உச்ச வரம்பினை காட்டிலும் மிகவும் கூடுதலாக உள்ளது. மேலும் அரசாணை (நிலை) எண்.2275 உள்துறை (போக்குவரத்து – E) நாள் 10-10-1990 – ன்படி மேற்கூறிய வகை வாகனங்கள் 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகியிருந்தாலோ மற்றும் 2.00 இலட்சம் கி.மீ. தூரம் ஓடியிருந்தாலோ இதில் எது பின்னாளில் அமைகிறதோ அந்நாளில் அந்த வாகனத்தினை கழிவு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மோட்டார் வாகனம் TN 37-G 3003-க்கு தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள செலவினமான ரூ.89,500/-மிகவும் கூடுதலாக உள்ளதாலும் அவ்வாகனம் வாங்கி 12 ஆண்டுகளுக்கு மேல் ஆகியுள்ளதாலும், அது 2.70 இலட்சம் கி.மீ. தூரம் ஓடியுள்ளதாலும் அதனை கழிவு செய்துவிட்டு அதற்கு பதில் புதியதாக ஒரு ஈப்பு அல்லது கார் நகராட்சிகளின் நிர்வாக ஆணையரின் அனுமதி பெற்று அலுவலக நடைமுறையினை பின்பற்றி வாங்கிக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம்.** **ந.க.எண். 26672/2006/எம்.டி.3.**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 196 நாள்.30.11.2006**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது**

---

**பொருள் எண் .8.**

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்க்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்க் கண்டவாறு பணிகளை ஏற்க 21-11-2006 – அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் பகுதியில் குறிப்பிட்டுள்ள சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 5464/06/ எம்.டி.2 | வார்டு எண்.4 ஜெகநாத நகரில் மழை நீா வடிகால் கட்டுதல் | 25.00 | 20-09-06 முதல் அழைப்பு | திரு பி. சுந்தர்ராஜ் . | 0.04% குறைவு |
| 2. | 6784/05/ எம்.டி.2 | வார்டு எண். 10 ஜி.வி. ரெஸிடென்சி பகுதியில் தார் தளம் அமைத்தல். | 17.50 | 20-09-06 முதல் அழைப்பு | திரு ஆர். சுந்தர்ராஜ் . | 0.04% குறைவு |
| 3 | 6781/05/ எம்.டி.2 | வார்டு எண்.15 ஜி.ஆர்.ஜி நகரில் உப்பிலிபாளையம் முதல் சௌரிபாளையம் பிரதான சாலை வரை தார் தளம் புதுப்பித்தல் | 10.00 | 20-09-06 மூன்றாம் அழைப்பு | தி/ள். கே.ஜி லட்சுமிபதி அன் கோ | 4.22% அதிகம் |
| 4. | 8790/05/ எம்.டி.2 | வார்டு எண்.22 ராமசாமி வீதி மருதாச்சலம்வீதி மற்றும் சுப்பையன் வீதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 6.90 | 20-09-06 மூன்றாம் அழைப்பு | திருமதி. ஏ.மீனாட்சி | 4.22% அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5. | 1363/05/ எம்.டி.2 | திருச்சி பிரதான சாலை ஒண்டிப்புதூா் மேம்பாலம் அருகில் வழி காட்டும் பெயா் பலகை அமைத்தல் | 5.60 | 20-09-06 இரண்டாம் அழைப்பு | தி/ள். கே.சி.பி இன்சினியா்ஸ் பேப்ரிகேட்டா்ஸ் | 3.29% அதிகம் |
| 6 | 14534/05 / எம்.டி.2 | வாா்டு எண்.22 பெரியாா் நகா் வடக்கு மற்றும் மேற்கு பகுதி குறுக்கு சாலைகளில் தாா் தளம் புதுப்பித்தல | 8.90 | 20-09-06 இரண்டாம் அழைப்பு | திரு. ஆா். கிருஷ்ணசாமி | 4.90% அதிகம் |
| 7 | 9590/05/ எம்.டி.2 | வாா்டு எண்.22 பெரியாா் நகா் தென்புற குறுக்கு சாலை தாா் தளம் புதுப்பித்தல் | 6.60 | 20-09-06 இரண்டாம் அழைப்பு | திரு. ஏ. அம்மாசையப்பன் | 4.33% அதிகம் |
| 8 | 9211/04/ எம்.டி.2 | வாா்டு எண்.66 சங்கனூா் சாலையில் ரயில்வே லைன் முதல் வடிக்காக காா் தளம் புதுப்பித்தல் | 8.50 | 20-09-06 நான்காம் அழைப்பு | தி/ள். சரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 4.53% அதிகம் |
| 9 | 10743/05 / எம்.டி.2 | வாா்டு எண்.66 சங்கனூா் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | 16.50 | 20-09-06 இரண்டாம் அழைப்பு | திரு. ஆா்.செல்வராஜ் | 4.90% அதிகம் |
| 10 | 8048/04/ எம்.டி.2 | வாா்டு எண்.3 நேரு வீதி தண்ணீா் பந்தல் சாலை 1, 2 பகுதிக்கு தாா் தளம் புதுப்பித்தல் | 6.00 | 20-09-06 ஆறாம் அழைப்பு | தி/ள். மல்லையய்யன் பில்டா்ஸ். | 4.93% அதிகம் |
| 11. | 8001/04/ எம்.டி.2 | வாா்டு எண்.17 தெற்கு வீதி 1 முதல் 7 வரை தாா் தளம் புதுப்பித்தல் | 5.80 | 20-09-06 ஆறாம் அழைப்பு | திரு. கே. நடராஜன் | 3.69% அதிகம் |
| 12 | 8002/04/ எம்.டி.2 | வாா்டு எண்.2 பி.கே.டி.நகரில் தாா் தளம் புதுப்பித்தல் | 6.00 | 20-09-06 ஆறாம் அழைப்பு | திரு.எம் .துரைசாமி | 4.82% அதிகம் |
| 13 | 8006/04/ எம்.டி.2 | வாா்டு எண்.1 பி.ஆா்.பி. காா்டன் பகுதியில் தாா் தளம் புதுப்பித்தல் | 5.80 | 20-09-06 ஆறாம் அழைப்பு | திருமதி .எம் சரோஜினி | 4.00% அதிகம் |
| 14 | 2981/04/ எம்.டி.2 | வாா்டு எண்.68 சம்பத் நகா் பகுதியில் உள்ள மாநகராட்சி இடத்தில் சுற்றுச் சுவா் கட்டுதல். | 7.25 | 28-09-06 மூன்றாம் அழைப்பு | திரு. ஆா். பால்ராஜ் | 3.46% அதிகம் |
| 15 | 17002/05 / எம்.டி.2 | வாா்டு எண்.6 அஸ்தாந்திர நாயக்கா் ஆரம்ப பள்ளிக்கு மராமத்து பணிகள் செய்தல். | 1.50 | 28-09-06 மூன்றாம் அழைப்பு | திரு. பி. பிரபாகரன் | 2.67% அதிகம் |
| 16 | 712/04/ எம்.டி.2 | வாா்டு எண்.29 வி.கே.கே. மேனன் சாலையில் திருவள்ளுவா் வீதியில் வடிகாலுக்குமூடுபலகை அமைத்தல். | 0.80 | 19-09-06 நான்காம் அழைப்பு | திரு. பி. பிரபாகரன | 0.05% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : வரிசை எண் 1 முதல் 2 வரையிலான பணிகள் மதிப்பீடு மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதாலும் வரிசை எண் 3 முதல் 16 வரையிலான பணிகள் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும்– **அனுமதிக்கலாம்**.

**ந.க.எண். 5464/06/எம்.டி.2**

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண். 197 நாள்.30.11.2006</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என ஏகமனதாகத் தீா்மானிக்கப்பட்டது**

**பொருள் எண் . 9**

கோவை வடக்கு விளாங்குறிச்சி கிராமத்தில், கோவை மருத்துவக்கல்லூரிக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டு க.ச.எண்..458 முதலான காலைகளில் 5.74 ஏக்கா் நிலம் கோவை மருத்துவக் கல்லூரியால் இது வரையில் பயன்படுத்தப்படாத நிலத்தில் தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பத் துறை ''எல்காட்'' நிறுவனத்தின் மூலம் தொழில் நுட்ப பூங்காவிற்கு அணுகுபாதை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் நிலத்தினை எல்காட் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய கோவை மாநகராட்சியின் மாமன்ற தீா்மானம் இயற்றி தீா்மான நகலினை அனுப்பி வைக்குமாறு கோவை வருவாய் கோட்டாச்சியா் தமது கடிதம் ந.க.எண்.4453/2001/ஆ4 நாள் 3-11-2006 – ல் கோரியுள்ளாா். அணுகுபாதை அமைக்க நில உரிமை மாற்றம் கோருமிடம் விளாங்குறிச்சி கிராமம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 9 மற்றும் 10 – ல் அமைகிறது. இந்நிலம் மாநகராட்சிக்கு சொந்தமானதல்ல.

| புல எண் | | பரப்பு ஏக்கரில் | | |
|---|---|---|---|---|
| க.ச.எண்.458 | | 0.59 | டி.டி.எண்.10 | கல்வி உபயோகப்பகுதி |
| க.ச.எண்.459 | | 1.33 | டி.டி.எண்.9 | கல்வி உபயோகப்பகுதி |
| க.ச.எண்.461/1 | பா | 0.66 | டி.டி.எண்.9 | கல்வி உபயோகப்பகுதி |
| க.ச.எண்.462/3 | பா | 0.96 | டி.டி.எண்.9 | கல்வி உபயோகப்பகுதி |
| க.ச.எண்.463/1 | பா | 1.09 | டி.டி.எண்.9 | கல்வி உபயோகப்பகுதி |
| க.ச.எண்.465/1 | பா | 0.75 | டி.டி.எண்.9 | கல்வி உபயோகப்பகுதி |
| க.ச.எண்.466/3 | பா | 0.36 | டி.டி.எண்.9 | குடியிருப்பு உபயோகப்பகுதி |
| மொத்தம் | | 5.74 | | |

இந்நிலங்களில் தமிழ்நாடு அரசின் தகவல் தொழில் நுட்பத்துறை ''எல்காட்'' நிறுவனத்தின் மூலம் தொழல் நுட்ப பூங்காவிற்கு அணுகுபாதை அமைக்க நில உரிமை மாற்றம் செய்ய மாநகராட்சி ஆட்சேபனை ஏதுமில்லை என தீா்மானம் இயற்றி கோவை வருவாய் கோட்டாட்சியருக்கு தெரிவிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் செய்யலாம் எண். 30000/2006/எம்.எச்.5.**

**மாநகர மன்ற தீா்மானம் எண். 198 நாள்.30.11.2006**

**பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப பூங்காவிற்கு அணுகுபாதை அமைக்க நில உரிமை மாற்றம் செய்ய மாநகராட்சிக்கு ஆட்சேபனை இல்லை. அவ்வாறு அமைக்கப்படும் அணுகுபாதை ஏற்கனவே உள்ள திட்டச்சாலையான தண்ணீா்பந்தல் சாலை மற்றும் அவினாசி சாலையினை இணைக்கும் வகையில் பொதுமக்கள் பயன்படும் வகையிலும் அமைக்கப்பட வேண்டும் எனவும் ஏகமனதாக தீா்மானிக்கப்பட்டது.**

---

**பொருள் எண் . 10.**

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்க்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தபுள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க 21-11-2006 – அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயா் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரா் பெயா் | ஒப்பந்தப் பகுதியில் குறிப்பிட்டுள்ள சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 9175/06/ எம்.டி.2 | வாா்டு எண்.7 ஜோதி நகா் வீதி எண். 1 முதல் 7 வரை ஏற்கனவே உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய மின்கம்பங்களில் 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல் | 3.20 | 7-11-06 முதல் அழைப்பு | தி/ள். சபரி எலக்ட்ரிக்கல்ஸ் | 4.92% அதிகம். |
| 2. | 9169/06/ எம்.டி.2 | வாா்டு எண். 9 அண்ணா நகா் விரிவாக்கம், தாமோதரசாமி லே-அவுட் மற்றும் பாரதி நகா் பகுதியில் ஏற்கனவே உள்ள தமிழ்நாடு மின்சார வரிய மின்கம்பங்களில் 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல். | 5.00 | 7-11-06 முதல் அழைப்பு | தி/ள். சபரி எலக்ட்ரிக்கல்ஸ் | 4.92% அதிகம். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3. | 9170/06/ எம்.டி.2 | வார்டு எண். 9 தச்சன் தோட்டம் வடக்கு சின்ன தோட்டம் மற்றும் பாங்கோ லே – அவுட் பகுதியில் ஏற்கனவே உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய மின்கமபங்களில் 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல். | 4.40 | 7-11-06 முதல் அழைப்பு | திரு. சபரி எலக்ட்ரிக்கல்ஸ் | 4.92% அதிகம். |
| 4. | 9170/06/ எம்.டி.2 | வார்டு எண். 10 சக்தி நகர் பெரியார் நகர் மற்றும் குமரன நகர் பகுதியில் ஏற்கனவே உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய மின்கமபங்களில் 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல். | 4.20 | 7-11-06 முதல் அழைப்பு | திரு. சபரி எலக்ட்ரிக்கல்ஸ் | 4.92% அதிகம். |
| 5. | 9174/06/ எம்.டி.2 | வார்டு எண்.9 சிவா நகர் ராமனுஜ நகர் இட்டேரி வீதி மற்றும் ஏ.வி.எம் கார்டன் பகுதியில் ஏற்கனவே உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய மின்கம்பங்களில் 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல் | 3.00 | 7-11-06 முதல் அழைப்பு | திரு. சபரி எலக்ட்ரிக்கல்ஸ் | 4.92% அதிகம். |
| 6. | 9171/06/ எம்.டி.2 | வார்டு எண். 10 முல்லை நகர் மகாலட்சுமி நகர், மற்றும் முருகன் நகர் பகுதியில் ஏற்கனவே உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய மின்கம்பங்களில் 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல். | 3.20 | 7-11-06 முதல் அழைப்பு | திரு. சபரி எலக்ட்ரிக்கல்ஸ் | 4.92% அதிகம். |
| 7. | 9176/06/ எம்.டி.2 | வார்டு எண். 10 கஸ்தூரி லே அவுட் ஏ.கே.ஜி நகர் மற்றும் சென்னிமலை லே – அவுட் பகுதியில ஏற்கனவே உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய மின்கமபங்களில் 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல். | 3.60 | 7-11-06 முதல் அழைப்பு | திரு. சபரி எலக்ட்ரிக்கல்ஸ் | 4.92% அதிகம். |
| 8. | 9173/06/ எம்.டி.2 | வார்டு எண். 15 பகுதியில் ஏற்கனவே உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய மின்கம்பங்களில் 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல். | 3.85 | 7-11-06 முதல் அழைப்பு | திரு. சபரி எலக்ட்ரிக்கல்ஸ் | 4.92% அதிகம். |
| 9. | 9168/06/ எம்.டி.2 | வார்டு எண். 14 அண்ணா நகர் கிருஷ்ணா நகர் மற்றும் பரமேஸ்வரி நகர் பகுதியில் ஏற்கனவே உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய மின்கம்பங்களில் 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல். | 3.50 | 7-11-06 முதல் அழைப்பு | திரு. சபரி எலக்ட்ரிக்கல்ஸ் | 4.92% அதிகம். |
| 10. | 9167/06/ எம்.டி.2 | வார்டு எண். 16 திருமகள் நகர் ரங்கநாயகி நகர் மற்றும் பாலன் நகர் பகுதியில் ஏற்கனவே உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய மின்கமபங்களில் 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல். | 4.20 | 7-11-06 முதல் அழைப்பு | திரு. சபரி எலக்ட்ரிக்கல்ஸ் | 4.92% அதிகம். |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : வரிசை எண் 1 முதல் 10 வரையிலான பணிகள் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதியாக உள்ளதால் மேற்கண்ட ஒவ்வொரு பணிக்கும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும்– **அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 9175/06/எம்.டி.2**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 199 நாள்.30.11.2006</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது**

---

**பொருள் எண் . 11.**

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்க்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தபுள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க 21-11-2006 – அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எ ண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரா் பெயா் | ஒப்பந்தப் பகுதியில் குறிப்பிட்டுள்ள சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 8567/06/ எம்.டி.4 | வாா்டு எண்.50 பி.எம்.சாமி காலனி பகுதிகளில் தாா் தளம் புதுப்பித்தல் | 20.00 | 15-11-06 முதல் அழைப்பு | தி/ள். சாந்தி எலக்ட்ரிக்கல்ஸ் | 0.63% குறைவு. |
| 2. | 8633/06/ எம்.டி.4 | வாா்டு எண்.50 ஏ.ஏ.திட்ட சாலையில் தாா் தளம் புதுப்பித்தல் | 20.50 | 15-11-06 முதல் அழைப்பு | திரு கே. நடராஜன் . | 0.08% குறைவு |
| 3. | 4037/06/ எம்.டி.4 | வாா்டு எண். 34 ஸ்ரீ ராம் லே அவுட் பகுதியில் தாா் தளம் அமைத்தல். | 7. 00 | 10-11-06 இரண்டாம் அழைப்பு | திரு ஏ. அம்மாசையப்பன் | 4.33% குறைவு |
| 4 | 6241/05/ எம்.டி.4 | வாா்டு எண்.49 கண்ணுசாமி வீதியில் தாா் தளம் புதுப்பித்தல் | 7.60 | 10-11-06 மூன்றாம் அழைப்பு | திரு. ஏ. வெங்கடாசலம் | 4.82% அதிகம் |
| 5. | 6680/05/ எம்.டி4 | வாா்டு எண்.51 ஸ்ரீனிவாசன் ராகவன் வீதியில் தாா் தளம் புதுப்பித்தல் | 7.40 | 10-11-06 மூன்றாம் அழைப்பு | தி/ள். சரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 3.46% அதிகம் |
| 6 | 7656/06/ எம்.டி.4 | வாா்டு எண்.59 ஐஸ்வா்யா நகரில் தாா் தளம் புதுப்பித்தல் | 8.00 | 10-11-06 இரண்டாம் அழைப்பு | தி/ள். மல்லயன் பில்டா்ஸ் | 4.89% அதிகம் |
| 7 | 929/06/ எம்.டி.4 | சிறுவாணி அடிவாரம் மாநகராட்சி பணியாளா் குடியிருப்பு பகுதியில் சுற்று சுவா் கட்டுதல். | 9.50 | 10-11-06 மூன்றாம் அழைப்பு | தி/ள். ஆா்.எஸ். பாலமுருகன் | 4.60% அதிகம் |
| 8 | 10375/05/ எம்.டி.4 | வாா்டு எண்.50 ஏ.ஏ. திட்ட சாலை நடை பாதையுடன் கூடிய பூங்கா அமைத்தல். | 10.50 | 10-11-06 மூன்றாம் அழைப்பு, | திருமதி. யு .மணி. | 4.352 அதிகம் |
| 9 | 5769/06 எம்.டி.4 | வாா்டு எண்.51 டி.பி. சாலையில் மேல்நிலை நீா்தேக்கத் தொட்டியில் சுற்றுச்சுவா் கட்டுதல் மற்றும் தொட்டியின் நிலையை உறுதிப்படுத்துதல். | 7.00 | 10-11-06 இரண்டாம் அழைப்பு | திரு. சுனில்குமாா் | 4.23% அதிகம் |
| 10 | 8203/06/ எம்.டி.4 | வாா்டு எண்.62 என்.எஸ்.ஆா் சாலை சிந்தாமணி நகா், சின்னம்மாள் வீதி மற்றும் ரத்தின சபாபதி வீதி சந்திப்புகளில் சிறு பாலங்கள் புதுப்பித்து கட்டுதல். | 4.50 | 10-11-06 இரண்டாம் அழைப்ப | தி/ள்.. எம்.எஸ் இன்சினியா்ஸ் | 4.85% அதிகம் |
| 11 | 6683/06/ எம்.டி.4 | வாா்டு எண். 51 சா் .சி.விராமன் சாலையில் தாா் தளம் புதுப்பித்தல் | 4.50 | 10-11-06 இரண்டாம் அழைப்பு | திருமதி. எ .மீனாட்சி | 4.29% அதிகம் |
| 12. | 6214/04/ எம்.டி.4 | வாா்டு எண்.34 ராஜ அண்ணாமலை சாலையில் குடிநிா் பிரதானக் குழாய் அமைத்தல் | 1.00 | 10-11-06 மூன்றாம் அழைப்பு, | திரு. எ. நாச்சிமுத்து | 2.38% அதிகம் |
| 13. | 6215/06 எம்.டி.4 | வாா்டு எண். 61 நடராஜ் லே அவுட் மேல்நிலை நீா்த் தேக்கத் தொட்டி வளாகத்தில் பம்பு செட் அமைத்தல் | 2.00 | 10-11-06 மூன்றாம் அழைப்ப | திரு. ஆா் பத்மநாபன் | 4.86% அதிகம் |
| 14 | 11843/05/ எம்.டி.4 | வாா்டு எண்.34 மேட்டுபாளையம் சாலையில் அண்ணா சிட்டி மாா்க்கெட் வளாகத்தில் சிமெண்ட தளம் அமைத்தல் | 3.50 | 10-11-06 இரண்டாம் அழைப்பு | தி/ள்.. எம்.எஸ் இன்சினியா்ஸ் | 4.49% அதிகம் |
| 15. | 073/06 எம்.டி.4 | வாா்டு எண். 62 கிருஷ்ணம்மாள் வீதி வடபுறம் வடிகால் புதுப்பித்து கட்டுதல் | 5.00 | 10-11-06 இரண்டாம் அழைப்பு | தி/ள்.. எம்.எஸ் இன்சினியா்ஸ் | 3019% அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 16 | 4726/06 எம்.டி.4 | வார்டு எண்.60 புவனேஸ்வரி நகரில் தார் தளம் புதுப்பித்தல் | 4.25 | 10-11-06 இரண்டாம் அழைப்பு | திருமதி. எம் சரோஜினி | 4.77% அதிகம் |
| 17 | 4733/04/ எம்.டி.2 | வார்டு எண்.61 சுப்பிரமணியபுரம் நடராஜ் லே – அவுட் மற்றும் ராமசாமி லே-அவுட் பகுதிகளில் கம்பத்துடன் கூடிய 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல். | 2.10 | 10-11-06 இரண்டாம் அழைப்பு | தி/ள்..சன்மேக் எண்டர்பிரைஸஸ் | 4.85% அதிகம் |
| 18 | 6542/06 எம்.டி.4 | வார்டு எண். 34 க்குட்பட்ட பகுதிகளில் கம்பத்துடன கூடிய 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல் | 1.85 | 10-11-06 இரண்டாம் அழைப்பு | தி/ள்..சன்மேக் எண்டர்பிரைஸஸ் | 4.92% அதிகம் |
| 19 | 8052/06/ எம்.டி.4 | வார்டு எண். 57 பூசாரிபாளையம் சின்னசாமி நாயக்கர் தோட்டம் பகுதியில் ஏற்கனவே உள்ள ஆர்.சி.சி. கம்பங்களில் புதிதாக 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல். | 2.40 | 10-11-06 இரண்டாம் அழைப்ப | தி/ள்..சன்மேக் எண்டர்பிரைஸஸ் | 4.84% அதிகம் |
| 20 | 9164/05/ எம்.டி.4 | வார்டு எண். 61 க்குட்பட்ட பகுதிகளில் 40 வாட்ஸ் குழல் விளக்குகளுக்கு பதிலாக 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல். | 3.20 | 10-11-06 இரண்டாம் அழைப்ப | தி/ள்..சன்மேக் எண்டர்பிரைஸஸ் | 4.84% அதிகம் |
| 21. | 7651/06/ எம்.டி.4 | வார்டு எண். 58 க்குட்பட்ட பகுதிகளில் 40 வாட்ஸ் குழல் விளக்குகளுக்கு பதிலாக 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல். | 4.10 | 10-11-06 இரண்டாம அழைப்பு, | தி/ள்..சன்மேக் எண்டர்பிரைஸஸ் | 4.84% அதிகம் |
| 22. | 7655/06 எம்.டி.4 | வார்டு எண். 59 க்குட்பட்ட பகுதிகளில் 40 வாட்ஸ் குழல் விளக்குகளுக்கு பதிலாக 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல். | 3.75 | 10-11-06 இரண்டாம் அழைப்பு | தி/ள்..சன்மேக் எண்டர்பிரைஸஸ் | 4.84% அதிகம் |
| 23. | 9018/05/ எம்.டி.2 | வார்டு எண்.5 சௌடேஸ்வரி நகர் திப்பு நகர், எம்.ஆர்.ஆர்.லே அவுட் புது இட்டேரி வீதி, மற்றும் அருள் ஜோதி புரம் ஆகிய பகுதிகளில் குடிநீர் பிரதான குழாய் அமைத்தல். | 4.95 | 3-11-06 மூன்றாம் அழைப்பு | திரு. சுனில்குமார் | 4.40% அதிகம் |
| 24. | 9020/06 எம்.டி.2 | வார்டு எண். 6 பாலாஜி நகர் பாரதியார் வீதி, காமராஜ் நகர், மங்களபுரம், காந்தி நகர் மற்றும் திருவள்ளுவர் நகர் ஆகிய பகுதிகளில் குடிநீர் பிரதான குழாய் அமைத்தல். | 4.95 | 3-11-06 மூன்றாம் அழைப்பு | திரு. சுனில்குமார் | 3.59% அதிகம் |
| 25 | 9021/06 எம்.டி.4 | வார்டு எண்.6 நொய்யல் பண்ணாரி நகர் சாஸ்திரி நகர் மற்றும் சேரன் நகர் ஆகிய பகுதிகளில் குடிநீர் பிரதான குழாய் அமைத்தல் | 4.80 | 3-11-06 மூன்றாம் அழைப்பு | திரு. சுனில்குமார் | 3.75% அதிகம் |
| 26 | 9019/04/ எம்.டி.2 | வார்டு எண்.6 ஆர்.கே.நகர் விரிவாக்கம் மற்றும் திருகுமரன் நகர் ஆகியபகுதிகளில் குடிநீா பிரதான குழாய் அமைத்தல் | 3.00 | 3-11-06 மூன்றாம் அழைப்பு | திரு. சுனில்குமார் | 2.44% அதிகம் |
| 27. | 9090/06 எம்.டி.2 | வார்டு எண்.19 பொன்னி நகரில் குடிநீர் பிரதான குழாய் அமைத்தல். | 5.00 | 3-11-06 மூன்றாம் அழைப்பு | தி/ள். கே.சி.பி இன்சினியர்ஸ் பேப்ரிகேட்டர்ஸ் | 2.93% அதிகம் |
| 28. | 5882/06 எம்.டி.4 | வார்டு எண். 56 பிரைட் கார்டன் ரங்கசாமி காலனி மற்றும் பழனியப்பா நகர் ஆகிய பகுதிகளில் குடிநீர் பிரதான குழாய் அமைத்தல். | 3.50 | 3-11-06 மூன்றாம் அழைப்பு | திருமதி. ஏ.பரிமளம் | 4.88% அதிகம் |
| 29 | 8753/06 எம்.டி.4 | வார்டு எண். 42 அபிராமி நகர் சாவித்திரி நகர் மற்றும் பிரபு நகர் ஆகிய பகுதிகளில் குடிநீர் பிரதான குழாய் அமைத்தல் | 5.00 | 3-11-06 இரண்டாம் அழைப்பு | தி/ள்.அலமு அசோஸிடேட்ஸ் | 4.08% ஆதிகம் |
| 30 | 1082/02 எம்.டி.2 | வார்டு எண் .60 ,61, 62 ,63 ஆகியபகுதிகளில் குடிநீா பிரதான குழாய் அமைத்தல் | 4.90 | 3-11-06 மூன்றாம் அழைப்பு | தி/ள்..சன்மேக் எண்டர்பிரைஸஸ் | 4.89% அதிகம் |
| 31 | 8760/06 எம்.டி.4 | வார்டு எண்.55 நாராயணசாமி நகர் மற்றும் சிதம்பரம் காலனி ஆகிய பகுதிகளில் குடிநீா பிரதான குழாய் அமைத்தல் | 4.60 | 3-11-06 மூன்றாம் அழைப்பு | திருமதி. அலமேலு மங்கை | 4.16% அதிகம் |
| 32 | 8759/06 எம்.டி.4 | வார்டு எண்.55 முனியப்பா நகர் சாஸ்தா நகர் ஆகிய பகுதிகளில் குடிநீா பிரதான குழாய் அமைத்தல் | 4.60 | 3-11-06 மூன்றாம் அழைப்பு | திருமதி. அலமேலு மங்கை | 2.78% அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 33 | 8761/06 எம்.டி.4 | வார்டு எண். 55 ராஜு நகர் சரோஜினி நகர் மற்றும் தில்லை நகர் விரிவாக்கம் ஆகிய பகுதிகளில் குடிநீர் பிரதான குழாய் அமைத்தல் | 4.60 | 3-11-06 மூன்றாம் அழைப்பு | திருமதி. அலமேலு மங்கை | 3.65% அதிகம் |
| 34 | 8757/06 எம்.டி.4 | வார்டு எண்.55 சாஸ்தா நகர் மற்றும் நாராயணசாமி காலனி ஆகிய பகுதிகளில் குடிநீர் பிரதான குழாய் அமைத்தல் | 4.60 | 3-11-06 மூன்றாம் அழைப்பு | திருமதி. அலமேலு மங்கை | 4.20% அதிகம் |
| 35 | 8764/06 எம்.டி.4 | வார்டு எண்.59 சின்னசாமி நகர், ஈ.வி.ஆர்.வீதி, ராஜேந்திர பிரசாத் வீதி, மற்றும்வீரமாத்தியம்மன் வீதி ஆகிய பகுதிகளில் குடிநீர் பிரதான குழாய் அமைத்தல் | 4.95 | 3-11-06 மூன்றாம் அழைப்பு | திருமதி. ஏ. பரிமளம் | 4.87% அதிகம் |
| 36 | 8755/06 எம்.டி.4 | வார்டு எண்.59 மும்மநாயக்கார் வீதி, விவேகானந்தர் வீதி, ராதிகா அவென்யூ விரிவாக்கம், பழனியப்பா நகர், தாகூர் வீதி விரிவாக்கம் ஆகிய பகுதிகளில் குடிநீர் பிரதான குழாய் அமைத்தல் | 5.00 | 3-11-06 மூன்றாம் அழைப்பு | திருமதி. ஏ. பரிமளம் | 4.88% அதிகம் |
| 37 | 9124/06 எம்.டி.2 | வார்டு எண். 33 அழகப்பா சாலையில் குடிநீர் பிரதான குழாய் அமைத்தல் | 1.35 | 3-11-06 இரண்டாம் அழைப்பு | தி/ள்..சன்மேக் எண்டர்பிரைஸஸ் | 4.30% அதிகம் |
| 38 | 8780/06 எம்.டி.4 | வார்டு எண்.54 பொன்விழா நகர் தெற்கு புறம் மற்றும் குழந்தை கவுண்டர் லே அவுட் ஆகிய பகுதிகளில் குடிநீர் பிரதான குழாய் அமைத்தல் | 5.00 | 3-11-06 இரண்டாம் அழைப்பு | தி/ள்..சன்மேக் எண்டர்பிரைஸஸ் | 4.82% அதிகம் |
| 39 | 8754/06 எம்.டி.4 | வார்டு எண்.54 எழில் நகர் இடும்பன் சாலை ஆகிய பகுதிகளில் குடிநீர் பிரதான குழாய் அமைத்தல் | 4.95 | 3-11-06 மூன்றாம் அழைப்பு | தி/ள்..சன்மேக் எண்டர்பிரைஸஸ் | 4.90% அதிகம் |
| 40 | 8763/06 எம்.டி.4 | வார்டு எண்.58 திலகர் வீதி , ஜெகதீஸ் நகர், பாலாஜி நகர், காந்தி நகர் ஆகிய பகுதிகளில் குடிநீர் பிரதான குழாய் அமைத்தல் | 4.90 | 3-11-06 மூன்றாம் அழைப்பு | திருமதி. ஏ. பரிமளம் | 4.87% அதிகம் |
| 41 | 8762/06 எம்.டி.2 | வார்டு எண். 58 பாரதியார் வீதி, ராஜுவ் காந்தி, ராதாகிருஷ்ணா வீதி திலகர் வீதி ஆகிய பகுதிகளில் குடிநீர் பிரதான குழாய் அமைத்தல் | 5.00 | 3-11-06 மூன்றாம அழைப்பு | திருமதி. ஏ. பரிமளம் | 4.89% அதிகம |
| 42 | 12904/06 எம்.டி.2 | வார்டு எண். 33 டாக்டர் ராஜேந்திர பிரசாத் சாலையில் குடிநீர் பிரதான குழாய் அமைத்தல் | 5.00 | 19-09-06 இரண்டாம் அழைப்பு | தி/ள அலமு அஸோசியேட்ஸ் | 3.48% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** . வரிசை எண் 1 முதல் 2 வரையிலான பணிகள் மதிப்பீடு மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதாலும் வரிசை எண் 3 முதல் 42 வரையிலான பணிகள் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் - **அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 8567/06/எம்.டி.4**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 200 நாள்.30.11.2006</u>**

**<u>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது</u>**

---

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**